# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, வில்சன் மேரி, எதெல்பர்கா, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஸ்டெல்லா ரோஸ்,ஜெயசேகரி -கொடைக்கானல், ஜெரின் மேரி - திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், விமல் மேரி, இரஞ்சிதம் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், ஆக்னஸ் ரோசாள் மேரி - தூத்துக்குடி,சலேத் மேரி-திருப்பூர், அர்மெல்லா - கன்னியாகுமரி,

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, ஜெகரெட்சகன் ஜோசப், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், நிர்மலா யூஜின் - சென்னை, சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், இருதய விஜிலா, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி - திண்டுக்கல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், மரிய பிரகாசம் - தர்மபுரி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. அர்மெல்லா - கன்னியாகுமரி**
**அருட்சகோதரி. ஆக்னஸ் ரோசாள் மேரி - தூத்துக்குடி**
**திருமதி. நிர்மலா யூஜின் - சென்னை**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# அமல உற்பவியே


## பதிப்பாசிரியர் பக்கம்

ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே, டிசம்பர் மாதம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமக்கு மகிழ்ச்சியின் மாதம். ஆண்டவர் இயேசு இந்த மண்ணுலகில் ஒரு குழந்தையாக பிறந்த மாதம். வண்ண விளக்குகளாலும், அலங்காரப் பொருள்களாலும் நம் வீடுகளை அழகுப்படுத்துகின்ற மாதம். இந்த மாதத்தின் மகிழ்ச்சியை இரட்டிப்பு ஆக்குவதற்கு திருஅவை கொடுத்த இன்னொரு விழாதான் அன்னை மரியின் அமலோற்பவ விழா.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பை கறைபடியாத, பாவம் படியாத பிறப்பாக மாற்ற வேண்டுமென்றால் அவரைப் பெற்றெடுத்த தாயின் பிறப்பும் கறைபடியாத, பாவம் படியாத பிறப்பாக இருக்க வேண்டும். அதனால்தான் கடவுள் இந்த மிகப்பெரிய பேற்றினை அன்னை மரிக்கு கொடுத்திருக்கின்றார். உலக வரலாற்றில் யாரெல்லாம் மனிதர்களாக பிறக்கின்றார்களோ அவர்கள் அத்தனைப் பேரும் ஜென்மப் பாவம் என்னும் கறைபடிந்துதான் பிறக்க வேண்டும். ஆதிப்பெற்றோரான ஆதாம் ஏவாள் செய்த பாவத்தின் விளைவாக பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவமானது தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து மனிதனிடம் வந்து கொண்டிருக்கிறது.

கடவுள் படைத்த உலகம் நன்மை நிறைந்த ஒன்று அப்படியிருக்க இங்கே தீமை எவ்வாறு நுழைந்தது. அவர் படைத்த உலகத்தில் புண்ணியங்கள் மட்டுமே நிறைந்திருக்க வேண்டும் ஆனால் அங்கே



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| உலக சகோதரத்துவத்தின் நாயகி மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| என்ன தவம் செய்தேன் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

எவ்வாறு பாவம் வந்தது? உலகைப் படைத்தக் கடவுள் உலகோடு சேர்த்து பாவத்தையும் படைத்து விட்டாரோ என்ற கேள்வியும் எழலாம். நம்முடைய கடவுள் நன்மை மிகுந்தவர், புண்ணியங்கள் பல தன்னகத்தே கொண்டிருப்பவர். அப்படியிருக்கும்போது எவ்வாறு இந்த உலகத்தில் பாவம் வந்தது? இந்தக் கேள்விக்கு புனித அகுஸ்தினார் சொல்வார், கடவுள் இந்த உலகத்தில் தீமையை படைக்கவில்லை, அதுபோல கடவுள் இந்த உலகத்திலே பாவத்தையும் படைக்கவில்லை. இங்கு தீமை என்பது நன்மை இல்லாத நிலை. அதுபோல பாவம் என்பது கடவுள் உருவாக்கியது அல்ல அது மனிதர் உருவாக்கியது. இத்தகைய பாவநிலை அன்னை மரியாளை சிறிதும் தீண்டவில்லை.

அன்னை மரியாளின் பிறப்பு ஒன்றும் மற்ற பிறப்புக்கள் போல சாதாரண பிறப்பாக இருக்கவில்லை. இது ஒரு அசாதாரணப் பிறப்பாகதான் இருந்திருக்கின்றது. எத்தனையோ வருட காத்திருப்புக்குப்பின்தான் அன்னை மரியாள் ஜோக்கிம் அன்னம்மாவுக்கு மகளாகப் பிறக்கின்றார். அன்னை மரியாள் பிறப்பதற்கு முன்னாலேயே கடவுள் அவரை முன்குறித்து வைத்துள்ளார். அதனால்தான் அன்னை மரியாளுக்கு ஜென்மப் பாவத்திலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டது. இருந்தும் நமது கடவுள் மனிதர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்கின்றார். அவர் தனது ஆசைகளை மனிதர்கள்மீது திணிப்பவர் கிடையாது. ஏற்கனவே அன்னை மரியாளைத் தன்னுடைய பணிக்காக முன்குறித்து வைத்துவிட்டேன் ஆகவே அன்னை மரியாள்தான் ஆண்டவர் இயேசுவின் தாயாக மாற வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்ற கடவுளும் கிடையாது. அன்னை மரியாளை முன்குறித்து வைத்தாலும் அவரின் விருப்பத்தை அறிகின்றவராக இருக்கின்றார்.

கபிரியேல் தூதரை அன்னை மரியிடம் அனுப்பி அவரது விருப்பத்தை அறிய முற்படுகின்றார். அன்னை மரியாள் கடவுளின் திட்டத்திற்கு இசைவு தெரிவித்த பிறகுதான் அவர் இயேசுவின் தாயாக மாறுகின்றார். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதைக் கடவுள் நிரூபித்துக் காட்டிய நிகழ்வுதான் அன்னை மரியாளை அமல உற்பவியாகப் படைத்தது. படைப்பின் தொடக்கத்தில் படைக்கப் பெற்ற ஏவாள் மூலமாக பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. புதிய ஏவாளான அன்னை மரியாள் மூலமாக வாழ்வு இந்த உலகத்தில் வந்தது. பழைய ஏவாள் உலக ஆசைக்கு அடிபணிந்தாள் பாவத்தில் விழுந்தாள். புதிய ஏவாள் அன்னை மரியாள் உலக ஆசையைத் துறந்தாள் கடவுளுக்கு மட்டும் அடிபணிந்தாள் வாழ்வைப் பெற்றுக் கொண்டாள். தனிமனித ஆசைகளும் தன்னல ஆசைகளும் அழிவுக்கு இட்டுச் செல்லக் கூடியவை என்பது இதன்மூலம் சாத்தியப்படுகிறது.

அமல உற்பவி அன்னை மூலமாக கடவுள் நமக்கு சொல்லித்தரும் பாடம், நம் கடவுள் மனிதர்களுக்கு சுதந்திரம் தரக்கூடிய கடவுள், மனிதர்களின் விருப்பம் இல்லாமல் அவர்களில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாத கடவுள். யாரெல்லாம் கடவுளின் திருவுளப்படி நடக்கின்றாரோ அவர்கள் அத்தனை பேருக்காகவும் சாத்தியமில்லாததை சாத்தியப்படுத்திக் காட்டுபவர். அன்னையின் அமல உற்பவம் இதற்கு ஒரு மிகப்பெரிய உதாரணம்.

**அமலம் கடவுள் கொடுத்த பரிசு**

**இது மனித கண்களுக்கு வியப்பு**

**ஆகட்டும்**





நிறைய வீணானது. கருப்பையை எடுக்க வேண்டும் என்றார்கள். நான் அன்னையிடம் அழுது மன்றாடினேன். இப்போது எனக்கும் குழந்தைக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பிலோமின் குயின் மேரி – செம்மஞ்சேரி**

என் மகளுக்கு பிறந்ததில் இருந்து உள்நாக்கு இல்லை, இதனால் சாப்பிடும் எதுவும் மூக்கு மூலம் வெளியே வரும். மருத்துவர் நான்கு மாதத்திற்கு பிறகு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். ஜீவ அன்னையிடம் அழுது மன்றாடினேன். ஜனவரி 30-ம் தேதி அறுவை சிகிச்சை நல்லபடியாக நடைபெற்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்

**ஆகட்டும்**



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

நவம்பர் மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ஜெனிபர் – கேளம்பாக்கம்**

என் மகளுக்கு திருமணமாகி மூன்று வருடங்களாக குழந்தை இல்லை. எங்களது உறவினர் குழந்தை இயேசு ஆலயத்தை குறித்து சொன்னார்கள். நான் கடந்த 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் இங்கு வந்து செபித்து வளையல் வாங்கி சென்றேன். இப்போது இந்த ஆண்டு 2024 ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி ஒரு அழகிய பெண் குழந்தையை கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**டே∴பின் – நாவலூர்**

ஏன்னுடைய மகனுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு காய்ச்சல் வந்தது. அது பின்பு சளி மற்றும் இருமல் ஆனது. சில நாட்களுக்கு பிறகு அவன் பேசும்போது தடுமாற தொடங்கினான். நுான் இங்கு வந்து அழுது மன்றாடினேன். நேற்று ஆண்டவர் என் மகனுக்கு சுகம் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கன்னியம்மா – செம்மஞ்சேரி**

என்னுடைய கருப்பையில் பிரச்சனை இருப்பதாக மருத்துவர்கள் கூறினர். என்னுடைய நஞ்சுக்கொடி கீழிறக்கம் ஆனது. அதனால் இரத்தம்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு ஏழைச் சிறுவன், மிகவும் அழுக்கான, கிழிந்த ஆடைகளை அணிந்துகொண்டு சாலை ஓரத்தில் நடந்து வந்தான். வரும் வழியில் ஒரு விலையுயர்ந்த துணிக்கடை இருந்தது. கண்ணாடியின் வழியாக உள்ளே இருந்த ரகரகமான, விதவிதமான துணிகளை ஏக்கத்தோடு பார்த்தான். வானத்தைப் பார்த்து, கடவுளே எனக்கு ஒரு **நல்ல** dress கிடைக்காதா என்று ஏக்கத்தோடு வேண்டினான். துணிக்கடையின் உரிமையாளர் ஒரு பெண்மணி CCTV Camera வின் வழியாக அச்சிறுவனைப் பார்த்து ஓடி வந்தார். சிறுவனை கடைக்குள் அழைத்துச் சென்றார். அவனுடைய உடையும் உடலும் மிகவும் அழுக்காக இருந்தது. ஆகவே குளியலறைக்கு கூட்டிச் சென்று குளிக்கச் சொன்னார். அவன் குளித்துவிட்டு வந்தவுடன் அவனுக்கு பிடித்த விலையுயர்ந்த ஆடையை அணிவித்தார். அச்சிறுவன் கண்ணாடியின் முன் நின்று தன்னைப் பார்த்து ரசித்தான். ஓடிச்சென்று உரிமையாளர் பெண்மணியின் கையைப் பிடித்து ரொம்ப நன்றி நான் கடவுளிடம் வேண்டினேன், அவரு ரொம்ப பிஸியோ, நீங்கதான் கடவுளின் மனைவியா அழகாயிருக்கீங்க என்றான்.

லூக்கா 8:21 இறைவார்த்தையை கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள். மத்தேயு 25:40 மிகச் சிறியோராகிய ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள். வறியவரின் துயரத்தை புரிந்து அவர்களோடு துணை நிற்கும்போது பாலன் இயேசுவின் உறவினர்களாக மாறுகின்றோம். அன்னை மரியாள் எலிசபெத்தோடு ஓடோடி சென்று உதவிச் செய்தார். கானாவூர் திருமணத்தில் தானாக முன்வந்து உதவிச் செய்து இறைவனின் தாய் என்பதை உறுதிப்படுத்தினார். குழந்தை இயேசுவை வரவேற்க இந்த டிசம்பர் மாதத்தில் தேவையில் இருப்போரை தேடிச் சென்று உதவி செய்யும்போது, குழந்தை இயேசுவை தூக்கி கொஞ்சும் உறவினர்களாக மாறுவோம். கிறிஸ்து பிறப்பு நமக்கு தருவது பொறுப்பு என்பதை உணர்வோம்.

**இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்.**

# உலக சகோதரத்துவத்தின் நாயகி மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் மெசியாவின் பிறப்பு நாளை சுமந்து புதிய மாதமும் ஆண்டின் இறுதி மாதமும் ஆன டிசம்பர் மலர்வது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இம்மாதத்தில் கிறிஸ்துவின் பிறப்பு விழா அன்று இறைவேண்டல் ஆண்டு நிறைவு பெற, மாபெரும் ஜுபிலி ஆண்டு 2025 தொடங்குகிறது. எதிர்நோக்கின் பயணிகள் என்ற மையப் பொருளுடன் இறையாட்சியின் விழுமியங்களால் இந்த உலகம் முழுவதும் நிரப்பப்பட வேண்டும் என்று திருஅவை நம்மை அழைக்கின்றது. ஜுபிலி ஆண்டின் மூன்று பரிமாணங்களை சிறப்பாக வாழ திருத்தந்தை பிரான்சிஸ் நம்மை அழைக்கின்றார். ஒன்று: உலகளாவிய சகோதரத்துவம். இரண்டு: ஏழைகளோடு தோழமை உறவு. மூன்று: இயற்கையை நேசித்தல், பராமரித்தல், வளர்த்தல். இந்த மூன்று கூறுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையது. இந்த மூன்று இறைப் பண்புகளும் இந்த உலகத்தோடு தொடர்புடையதாகத் தோன்றுகிறது. ஆனால் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவார்: இறைவனோடு நெருங்கிய உறவு இல்லாதவர்கள் இம்மூன்றையும் வாழ்வது மிகக் கடினம். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற இயேசுவின் ஏக்கத்தை உலகளாவிய சகோதரத்துவம் வலியுறுத்துகிறது. வறுமை, பசி, அறியாமையில் உழல்வோர் மற்றும் வாங்கும் திறன் அற்ற அனைவரும் ஏழைகள். நாம் அனைவர் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டாலும் ஏழைகள் நமது சிறப்பான கருணைக்கும் அக்கறை, அரவணைப்பிற்கும் உரியவர்கள். இயற்கை இறைவன் நமக்குத் தந்த கொடை. அதன் வளங்கள் அனைவருக்கும் சொந்தம். அதில் விளைவிக்கப்படும் பொருட்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். ஆனால் நாம் நடைமுறையில் காண்பது என்ன? ஆதிக்க வர்க்கமும் பணக்காரக் கும்பலுமே இந்த வளங்களை சூறையாடுகின்றன. இச்சூழலில் உலக சகோதரத்துவத்தையும் அன்னை மரியாவையும் இணைத்துப் பார்க்கிறோம். இயற்கைச் சூழலில், மாட்டுத் தொழுவத்தில், பிறந்த உலக மீட்பர் இயேசுவைத் தரிசிக்க முதலில் விண்ணக அழைப்பைப் பெற்றவர்கள் ஏழைகளான இடையர்கள். அதன் பின்னர் மூன்று கீழ்த்திசை ஞானிகள். எனவே நம்பிக்கை ஆண்டின் மூன்று அம்சங்களோடும் அன்னை மரியா மிக நெருங்கியத் தொடர்பு கொண்டிருக்கிறார். அதில் முதன்மையான உலக சகோதரத்துவத்தோடு அவரைத் தொடர்புபடுத்தி இக்கட்டுரையில் நுழைவோம்.

**முன்னுரிமை பெற்ற இடையர்கள்**

இயேசு ஏழையாக ஏழைகளுக்காகப் பிறந்தார். ஏழையருக்கே நற்செய்தியை அறிவிக்க வந்தேன் என்று கூறினார். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு உங்களுக்கு உரித்தானது என்று போதித்தார். இயேசுவின் பிறப்பைப் பற்றிய பகுதியை நற்செய்தியில் வாசிக்கும் போது பிறப்பிலேயே இயேசு ஏழைகளோடு கொண்டிருக்கப் போகிற தோழமை உறவு நமக்கு வெளிப்படுகிறது. லூக்கா நற்செய்தியாளர் உள்ளத்தில் (வயிற்றில்) விதைக்கிறார். அதாவது வானத்தூதரை கடவுள் தம்முடைய வார்த்தையை விதைக்கின்ற கருவியாக பயன்படுத்துகிறார். இறைவார்த்தையை தாங்குகின்ற நல்ல நிலமாக அன்னை மரியாவின் திருவயிறு இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. வானத்தூதரும் இறைவார்த்தையை விதைக்கிறார். அன்னை மரியாவும் கருதரிக்கிறார். கடவுளின் மகனாகிய மாட்சிமை பொருந்திய கிறிஸ்துவை கருத்தரிக்கிறார்.

**தூய ஆவியாரின் நிழல்**

தூய ஆவியார் நிழலிட்டதை புனித அகஸ்டின் விண்ணகத்திலிருந்து மருத்துவர் இறங்கி வந்து நிழலிட்டதாக விரிவுபடுத்தி கூறுகிறார். தூய ஆவியார் நிழலிட்டதால், அன்னை மரியா காயமடையவில்லை என்று பொருள் உணர்ந்து கூறுகிறார். அதற்கு புனித அகஸ்டின் மேலும் கூறுகின்றபோது காயமடைந்தோரை தமது ஒரு தொடுதலால் தொட்டு குணமாக்கிய ஆண்டவர் ஒரு வார்த்தைச் சொல்லி உயிர்கொடுத்த ஆண்டவர் தம் தாயை கவனியாமல் விட்டு விடுவாரோ? என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கிறார். அத்தகைய தூய ஆவியாரின் நிழலால் அன்னை மரியா தமது உடல் சார்ந்த ஒருமைப்பாட்டில் உடல் சார்ந்த முழுமையில் என்றுமே குறைவை காணவில்லை. மாறாக நிறைவையே கண்டார். இத்தகைய நிறைவு அன்னை மரியாவின் கன்னிமை தன்மையை அதிகரிக்க செய்தது. ஒருபோதும் குறையச் செய்யவில்லை. அன்னை மரியாவின் உள்ளத்தில் (வயிற்றில்) விதையாக வார்த்தையாக விழுந்த ஆண்டவர் அன்னை மரியாவை எல்லவித நலன்களாலும் அணி செய்திருக்கின்றார்.

அதன்பயனாக அன்னை மரியா தமது வாழ்வில் அன்றாடப் பணிகளை மேற்கொண்டார். அதிலும் சிறப்பாக தூய ஆவியார் வழியாக தூய்மையான பரிசுத்தமான இறைவார்த்தையை கேட்டல், கருத்தரித்தல், குழந்தையை வளர்த்தல் குழந்தைக்கு தாய்பால் தருதல் போன்ற அன்றாட பணிகளை அழகாக செய்தார். எனவே அன்னை மரியா தம்மை நோக்கி வருபவர்களை தம்மை நோக்கி மன்றாடுபவர்களை புறந்தள்ளாமல் உதவி செய்கிறார். இத்தகைய பணிகள் மூலமாகவே அன்னை மரியா புதிய ஏவாளுக்குரிய புதுப்பிக்கும் பணியை புன்முறுவலோடு செய்கிறார். ஆண்டவரும் பெண்களிடம் பிறந்தவராகி புதிய ஆதாமாக மாறி பழைய ஆதாம் வழியாக உலகில் நுழைந்த பாவத்தையெல்லாம் தூய்மைப்படுத்துகிறார். அதாவது ஆண்டவரின் பிறப்பு நமக்கு நம்பிக்கை தருகிறது.

Hope doses not disappoint us என்ற திருத்தந்தையின் அழைப்பை நாமும் ஏற்று வாழ கடமைப்பட்டுள்ளோம். எதிர்நோக்கு நமக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது என்பதை ஏற்று வாழ கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு தருகின்ற செய்தியாக இருக்கின்றது. கிறிஸ்துவின் அருள் நிறைந்த பார்வை எவ்வாறு தந்திரம் நிறைந்த பாம்பின் பார்வையை முறியடித்ததோ அதுபோல நம்மிடம் காணக்கிடைக்கின்ற தீமை நிறைந்த பார்வையினை நன்மைகளின் ஊற்றாக மாற்றும் என்பதில் சந்தேகமே இல்லை.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

14



சென்ற மாத இதழில் அன்னை மரியாவும் திருஅவையும் என்ற தலைப்பின் கீழ் புனித அகஸ்டினின் கருத்துகளைப் பார்த்தோம். இந்த மாத இதழில் பழைய ஏவாளோடு புதிய ஏவாளாகிய அன்னை மரியாவை இணைத்துப் புனித அகஸ்டின் கூறும் கருத்துகளைப் பார்ப்போம்.

**வீழ்ச்சியும் எழுச்சியும்**

பழைய ஆதாம், பழைய ஏவாளால் வீழ்ச்சி அடைந்தார். புதிய ஆதாமாகிய கிறிஸ்து புதிய ஏவாளாகிய அன்னை மரியாவால் உயிர்பெற்று எழுந்தார் என்று கூறி பழைய ஏவாளால் இறப்பு வந்ததாக ஒப்புமை கூறி புதிய ஏவாளால் ஒளி பிறந்து வாழ்வு வந்ததாக கூறுகிறார். பழைய ஆதாம் ஏவாளின் வற்புறுத்தலுக்கு செவிகொடுத்தார் எனவே வீழ்ந்தார் என்றும் புதிய ஆதாமாகிய கிறிஸ்து அன்னை மரியாவின் ஒப்புதலால் உயர்வு பெற்றார் என்றும் வெற்றி பெற்றார் என்றும் குறிப்பிடுகிறார். சாத்தான் உருவத்தில் வந்த பாம்பு ஏவாளை ஏமாற்றி இறப்பை வருவித்ததாக கூறும் அகஸ்டின் புதிய ஆதாம் கிறிஸ்து புதிய ஏவாள் வழியாக வாழ்வை கொடுக்கிறார் என்று அறிக்கையிடுகிறார்.

**பழைய ஏவாளும் புதிய ஏவாளும்**

பாம்பு வடிவில் வந்த தீய வானதூதர் பழைய ஏவாளைப் பொய்கூறி ஏமாற்றினார் என்றும் நல்ல வானத்தூதர் அன்னை மரியாவை உற்சாகப்படுத்தியதாக கற்பனையில் கூறுகிறார். பழைய ஏவாள் பாம்பின் தூண்டுதலுக்கு உள்ளாகி தன்னுடைய கணவரை சிதைத்தார் என்று உறுதிபட கூறி புதிய ஏவாள் அன்னை மரியாள் வானத்தூதரின் வார்த்தைக்கு செவிமடுத்து தன்னுடைய வயிற்றை இறைமகனாகிய கிறிஸ்து தங்குவதற்கு தயார்படுத்தினார் என்று விரிவாக கூறுகிறார். பழைய ஏவாள் பாம்பின் ஏமாற்று மற்றும் வெற்று வார்த்தையால் தன் வாழ்வையே இழந்தார் ஆனால் அன்னை மரியாள் வானத்தூதரின் வார்த்தைக்கு செவிமடுத்து பழைய ஏவாளால் இழந்த வாழ்வை மீட்டார் என்று கூறுகிறார். பழைய ஏவாள் தன்னுடைய நம்பிக்கையின்மையினால் தவறான வார்த்தையை நம்பினார் அன்னை மரியாள் தம்முடைய நம்பிக்கையினால் வாழ்வை நமக்களித்தார். பழைய ஏவாள் தம்முடைய கீழ்படியாமையால் பாவத்தின் தொடக்கமாக இருந்து விட்டார் எனவே நாம் அனைவரும் சாகிறோம் அன்னை மரியாவின் நம்பிக்கையினால் அழியா வாழ்வை பரிசளிக்கிறார் என்று அழகுபட எடுத்துரைக்கிறார்.

**வார்த்தை வாழ்வாகும்**

சாத்தான் பாம்பின் வடிவிலே பழைய ஏவாளோடு உறவாடி அந்த உரையாடல் மூலமாக இறப்பு உலகில் நுழைந்தது. கடவுள் வானத்தூரின் வாழ்த்துரை மூலமாக வார்த்தையை அன்னை மரியாவின்





மிக அழகாக இதைப் பதிவு செய்கிறார். 'விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்''. இன்னும் தொடர்ந்து ஏழ்மையில் பிறந்த இயேசு முதல் முறையாக ஏழைகளுக்குத் தன்னை வெளிப்படுத்துவதையும் லூக்கா மிக அருமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். அப்பகுதியில் இரவெல்லாம் தங்கள் ஆட்டுக்கிடாயைக் காத்துக் கொண்டிருந்த ஏழைகளான இடையர்களுக்கு வானதூதர் தோன்றி இயேசுவின் பிறப்பு செய்தியை அறிவிக்கின்றார். 'அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் இதோ உங்களுக்கு அடையாளம்'' என்றார். மேலும் விண்ணகத் தூதர் பேரொளி உன்னதத்தில் உறையும் கடவுளுக்கு மாட்சியும் இவ்வுலகில் நல் மனம் கொண்டோருக்கு அமைதியும் உரித்தாகுக என்றும் முழங்கினார். ஏனெனில் நல்மனம் கொண்ட ஏழைகளே இறைவனுக்கு உகந்தவர்கள் என்ற உறுதிமொழியையும் கூறிவிட்டு விண்ணகம் சென்றனர் என்று நற்செய்தியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இடையர்கள் பெத்லகேமுக்கு விரைந்தனர். தாங்கள் கேட்ட மகிழ்ச்சியான செய்தியை, நற்செய்தியை முதன்முறையாகப் பறைசாற்றினர். திருக்குடும்பத்தை சந்திக்கும் பேறு பெற்றனர். கடவுளை போற்றிப் புகழ்ந்து கொண்டே தங்கள் கிடைகளுக்குத் திரும்பிச் சென்றனர். நிச்சயமாக மரியாவுக்கும் குழந்தை இயேசுவுக்கும் தேவையான உதவிகளை செய்திருப்பார்கள். மலரும் ஜூபிலி ஆண்டு - 2025 மிகச் சிறப்புடன் திருஅவையில் தொடங்கவிருகின்றது. இறைவன் நம்மீது சிறப்பான அருள் வரங்களைப் பொழியக் காத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால் ஜூபிலி ஆண்டு அறிவுறுத்தும் கடமைகளை ஆற்றாமல் அதன் பலன்களை எதிர்பார்ப்பது சரியல்ல. இயேசுவின் பிறப்பு நிகழ்வில் ஏழைகள் அவரைத் தேடிச் சென்றனர். மரியா இந்நிகழ்வை தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார். ஏழைகளுக்காகப் பிறந்த இயேசுவின் மனநிலையை தனதாக்கிக் கொண்டார். எனவே தான் எகிப்தில், எளிமையான அகதி போன்று வாழும் வாழ்வை துணிவுடன் மேற்கொண்டார். நாசரேத்து ஊரில் திருக்குடும்பம் உடல் உழைப்பில் ஈடுபட்டு உணவு உண்டது. கானாவூரில் நடைபெற்ற எளிய குடும்பத்தைச் சேர்ந்த திருமண வீட்டிற்கு சென்றார். தனது மகனின் வருகையினால் விருந்தினர் கூட்டம் அதிகரிக்கும் என்று உய்த்துணர்ந்தார். இரசம் தீர்ந்து போவதைக் கண்டு அக்குறையை நீக்க தன் மகனிடமே விரைந்தார். எளிய மனத்தோர் இல்லங்களில் என்றும் மகிழ்ச்சி எனும் இரசம் குறையாமல் இருக்கும் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். இயேசுவைப் புதிய இரசமாகக் காட்டுகிறார். அந்த இயேசுவின் கட்டளையை பின்பற்றுவோர், வாழ்வோர், என்றும் மகிழ்வால் நிறைந்திருப்பர். அவர்கள் இறையாட்சியைக் சுதந்தரித்துக் கொள்வார்கள். ஏழைகளுக்கு நம் வாழ்வில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று பல வகையான உண்மைகளை மரியா இங்கு நமக்கு உணர்த்துகின்றார்.

**பேறுபெற்ற கீழ்த்திசை ஞானிகள்**

எளிய இடையருக்கு வானதூரை அனுப்பி மீட்புச் செய்தியை அறிவித்த இறைவன், அறிவு ஜீவிகளும் ஞானமிக்கவர்களுமான கீழ்த்திசை ஞானியர் மூவருக்கு, விண்மீன் வழியே தனது மகனின் பிறப்பு செய்தியை அறிந்து கொள்ளத் தூண்டுகிறார். விண்மீன் சுட்டிக்காட்டுவது ஒரு பெரிய

மகானை, அரசரை, இறைத் தூதரை. இதையெல்லாம் உய்த்துணர்ந்தவர்களாய் இறை ஆவியாருக்குப் பணிந்தவர்களாக இயேசுவின் முப்பரிமாண செயல்பாடுகளை உணர்த்தும் காணிக்கைகளை ஏந்தி வருகின்றனர். இடையில் விண்மீன் மறைந்து இருந்தாலும் மீண்டும் தோன்றி குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும் வரை ஞானிகளுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் மட்டில்லா பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். குழந்தை அதன் தாய் மரியாவிடம் இருந்தது. நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தம் காணிக்கைகளை குழந்தைக்கு கொடுத்தார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாக தங்கள் நாடு திரும்பினார்கள்.

**உலக சகோதரத்துவம்**

கீழ்த்திசை நாடுகளிலிருந்து அமைதியின் இளவரசரை சந்திக்க வந்த ஞானிகளும் அரசர்களுமான மூவரை, மரியா அன்புடன் வரவேற்றிருந்திருப்பார். வான இயல், இறைக் குரலுக்குப் பணிந்த அம்மூவரையும் பாராட்டியிருந்திருப்பார். ஏரோது மன்னனின் உண்மையற்ற உரையாடலைக் கேட்டு வருந்தி, இறைவனிடம், குழந்தையைக் காப்பாற்ற குரல் எழுப்பியிருப்பார். இன்றும் அன்னை மரியா, உலக மக்களின் அமைதிக்காக, மகிழ்ச்சிக்காக, ஒற்றுமைக்காக இறைவனிடமும் தனது மகனிடமும் பரிந்துரை மன்றாட்டுகளை எழுப்பியவாறு இருக்கின்றார். உலகத் தலைவர்கள் இயேசுவின் பிறப்பு, உயிர்ப்பு கொண்டு வந்த அமைதியை உணர்ந்து அனுபவித்து தம் மக்களுக்கு வழங்க வேண்டும் என விரும்புகிறார். மூன்று ஞானிகள் அமைதியின் ஆண்டவர் முன் பணிந்தது போன்று, நாடுகளின் தலைவர்கள் ஆதிக்கம், அதிகாரம், அணு ஆயுதப் போர் இவைகளினின்று தம்மை விடுவித்துக் கொள்ள இயேசுவின் இறையாட்சி விழுமியங்களுக்கு அடிபணிய வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவார்: நமது வீடுகளில், குடும்பங்களில் சகோதரத்துவம் நிலவும் போது, உலக அளவிலும் அது உணரப்பட நாம் வழியாகிறோம். அதே அமைதி, ஒற்றுமை, பிறரன்பு செயல்பாடுகள் சிறிய வட்டத்தில் குறைவு படும்போது, இந்த பரந்துபட்ட உலகிலும் இறைப்பண்புகள் பரவாமல் இருக்க நாம் காரணமாகிறோம். இறைச் சாயலாக படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் போற்றப்பட வேண்டும். அதுவே படைத்த இறைவனுக்கு நாம் அளிக்கும் புகழ்ச்சி, மாட்சி. ஆனால் இன்று இந்த உலகில் மாண்பு இழந்து, முகவரி இன்றி, வேதனையின் உச்சகட்டத்தில் இருக்கும் அகதிகள், புலம்பெயர்ந்தோர், சிறைவாசிகள், இந்தியா-இலங்கை எல்லாப் பகுதிகளிலும் அவதியுறும் மீனவர்கள், உக்ரைன், பாலஸ்தீன் நாடுகளில் கண்ணீரிலும் கவலையிலும், பசியிலும் வறுமையிலும் போராடும் பெண்கள், குழந்தைகள் இவர்களோடு சகோதரத்துவ உறவை எவ்வாறு வளர்த்துக் கொள்வது. உலகத் தலைவர்கள் உலக அமைதிக்காக, மக்களின் ஒற்றுமையான வாழ்வுக்காக தீர்க்கமான முடிவுகளை அமைதி பேச்சுவார்த்தை மாநாடுகளில் நிறைவேற்ற உலகளாவிய சகோதரத்துவத்தின் நாயகியாகிய மரியா உறுதுணையாக இருப்பாராக. ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ என்று இந்தத் தலைவர்களின் உள்ளக் காதுகளில் உரக்க ஒலிப்பாராக. நாமும் ‘எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக’’ என்ற இயேசுவின் ஏக்கப் பெருமூச்சை நமதாக்கி, அது நமது இதயத்தின் ஆழத்திலிருந்து அடிநாதமாக ஒலிக்கச் செய்வோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்கள்.





மரியாவும் சூசையும் ஒருமித்து செபிக்கிறார்கள். இறைவனுக்கு நன்றி துதிப்புகழ் பாடுகிறார்கள். பின்னர் ஓய்வெடுத்துக்கொண்டு தங்கள் அன்றாடப் பணிகளை இறை சித்தத்துக்கு முழுமையாக அடிபணிந்து செயல்படுவோம் என்றும் கடவுளின் சித்தம் நம்மில் முழுமையாக நிறைவேறட்டும் என்றும் தங்களையே அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றார்கள்.

**அன்னை மரியாவின் நற்பண்புகள்:**

சூசையப்பர், அன்னை மரியாவிடம் நாம் உடனே எகிப்துக்கு செல்ல வேண்டும். ஏனென்றால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து என்று கூறிய போது, அன்னை மரியாள் மறுத்து பேசியிருக்கலாம். தனது உள்ளத்தில் எழக் கூடிய ஆயிரம் கேள்விகளை சூசையிடம் கேட்டும் அவரை மனச் சஞ்சலத்திற்கு உள்ளாக்கியிருக்கலாம். குழந்தை சேசு கடவுளின் மகனாக இருப்பதால் நாம் ஏன் ஏரோதுக்கு அஞ்ச வேண்டும்? என்று கேட்டிருக்கலாம். அல்லது என்னால் உடனே புறப்பட முடியாது என்று மறுத்திருக்கலாம். கடவுளின் தாயாக நானிருப்பதால் நாம் ஏன் எகிப்துக்கு அகதிகளாக செல்லவேண்டும் என்று பேசியிருக்கலாம். ஆனால் அன்னை மரியாள் மேற்கண்ட எதையும் செய்யாமல் எப்போதும் ஜெபித்துக் கொண்டும், தங்கள் அனுதின கடமைகளை கடவுளின் சித்தத்திற்குக் பணிந்து சிறப்பாக செய்வதிலும் முழுக் கீழ்ப்படிதலிலும், ஆழ்ந்த தாழ்ச்சியிலும் சிறந்து விளங்கினார்கள். அன்னையிடம் சிறந்து விளங்கிய புண்ணியங்கள் அனைத்தும் உந்நத கடவுளின் அற்புத செயலே!

**பொதுநிலையினரின் பார்வையில் அன்னையின் இரண்டாம் வியாகுலம்:**

பொது நிலையினராகிய நாம் அன்னை மரியாவின் இரண்டாம் வியாகுலத்தை தியானிக்கும் போது, வார்த்தையான இறைவன் குழந்தை சேசுவாக எகிப்தை நோக்கிய பயணத்திலும், எகிப்தில் தங்கி வாழ்ந்த நாட்களிலும் அன்னை மரியாவுடனும் சூசையுடனும் உடனிருந்தார் என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. துன்ப வேளையில் அவர்களோடு இருப்பேன். அவர்களை தப்புவித்து பெருமைபடுத்துவேன் (தி.பா.91:15) என்னும் இறைவார்த்தை திருக்குடும்பத்தின் வாழ்வில் செயலாற்றியதை காண்கிறோம். குழந்தையின் உயிருக்கு ஆபத்து என்றதும் எகிப்துக்கு பயணமானார்கள். நாமும் நம்முடைய ஆத்துமத்துக்கு எப்போதெல்லாம் எந்த இடங்களிலெல்லாம் ஆபத்து நேரிடும் என்று அஞ்சுகிறோமோ அப்போதெல்லாம் அவ்விடங்களை விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும். அதாவது சாவான பாவத்தில் விழுகின்ற ஆபத்து நேரிடும் போது அதிலிருந்து தப்பிக்க பெருமுயற்சி செய்வதோடு இறைவேண்டலும் செய்ய வேண்டும். நம்முடைய வாழ்வு முழுவதையும் தேவ பராமரிப்புக்கு ஒப்புக் கொடுத்து நம்பிக்கையை அதிகமாக்க வேண்டும். நற்கருணை சந்திப்பு, இறைவார்த்தையை வாசித்து தியானித்தல், ஜெபமாலை செபித்தல், திருப்பலியில் பங்கேற்றல் ஆகியவற்றின் மூலம் குழந்தை சேசு, அன்னை மரியாள் மற்றும் புனிதர்கள் ஆகியோரின் உடனிருப்பை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். அப்போது வியாகுல மாமரியின் மூலம் கடவுளின் இரக்கத்தையும் ஆசீரையும் நிறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**வியாகுல மரியே வாழ்க!**



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 2

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவின் முதல் வியாகுலத்தை உந்நத கடவுளின் அரும் பெரும் செயலாக சிந்தித்த நாம், ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச்செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப் போகிறான். என்றார். யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தார். (மத்: 2: 12-15) என்று விவிலியம் காட்டும் அன்னை மரியாவின் இரண்டாம் வியாகுல நிகழ்வுகளை அவ்வாறே சிந்திப்போம்.

**திருக்குடும்பத்தின் எகிப்து பயணம்:**

ஏரோது குழந்தையை கொல்லத் தேடப்போவதாகவும், நாம் உடனே எகிப்துக்கு தப்பிச் செல்ல வேண்டும் என்று புனித யோசேப்பு அன்னை மரியாவிடம் கூற, அன்னை மரியாவும் மறுப்பேதும் சொல்லாமல் உடனே புறப்பட தயாராகிறார். நீண்ட பயணத்திற்கு தேவையான அனைத்தும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அன்னை மரியாள் குழந்தை சேசுவுடன் கழுதையில் அமர, பொதி சுமை ஏற்றப்பட்டுள்ள கழுதையை தனது கழுதையோடு சேர்த்து கட்டியபின் சூசையப்பரும் ஏறிக்கொள்கிறார். திருக்குடும்பத்தின் நீண்ட பயணம் ஆரம்பமாகிறது. பேத்லகேமிலிருந்து திருக்குடும்பம் எகிப்தில் வாழ்ந்த எலியாப்போலிஸ் நகருக்கு 300 மைல் அதாவது 480 கிலோமீட்டர் தூரம். ஆவர்கள் செல்ல வேண்டிய வழிப்பாதையில் 160 கிலோமீட்டர் பாலைவனப்பகுதியாகும். திருக்குடும்பம் ஒருநாளைக்கு சராசரியாக 25 கிலோமீட்டர் பயணம் செய்கிறார்கள். பாலைவனப்பகுதியில் வறண்ட நிலங்களும் பாறைகளும் குன்றுகளும் மலைகளும் நிறைந்த பகுதியாகும். எனவே திருக்குடும்பத்தின் பயணப்பாதைகள் மிகவும் கடினமானதே. எகிப்துக்கு வந்தடைந்த திருக்குடும்பம் குழந்தையின் பாதுகாப்பு கருதி உள்நாட்டு நகரான எலியோப்பொலிஸ் நகரைத் தேர்ந்தெடுத்து அங்கு தங்குகின்றனர். ஊருக்கு அருகாமையில் உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அவ்வீட்டில் குடியேறினார்கள்.

எகிப்தில் திருக்குடும்பம்:

எகிப்தில் திருக்குடும்பம் தங்கிய வீடு ஒரு சிறிய வீடு. போதிய வசதிகள் இருக்க வில்லை. இருப்பினும் தங்கள் கடும் உழைப்பினாலும் முயற்சியினாலும் வீட்டை தூய்மை செய்து அழகுபடுத்துகிறார்கள். அவ்வீட்டின் அறைகளை செபிப்பதற்கும் தச்சு வேலை செய்வதற்கும் மற்ற பணிகளை செய்வதற்கும் ஏற்றாற் போல் மாற்றிக் கொண்டு, குழந்தை சேசுவுக்கு அமுதூட்டி தூங்க வைத்துவிட்டு, அன்னை





## அன்னையின் 72 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### பாரீஸ் நகர அன்னை Notre-Dame de Paris பகுதி I

உலக கலை, பண்பாடுகளில் சிறந்த நகரங்களில் முதன்மையானது என பிரான்சு தேசத்தின் தலைநகராம் பாரீஸை சொல்வார்கள். ஒரு காலத்தில், ஐரோப்பிய நாடுகளில் சுற்றுலா மேற்கொள்வோர் பொதுவாக சொல்வது உரோம், பாரீஸ் மற்றும் லண்டன் மாநகரங்களை பார்க்கச் செல்கிறேன் என்பதாக அமையும். தற்போது நிலைமைகள் மாறி ஏனைய புகழ்பெற்ற இடங்களுக்கும் மக்கள் செல்கின்றனர்.

பாரீஸ் என்றவுடன் நம் நினைவுகளுக்கு வருவது வானுயர எழுந்த நிற்கும் எபில் கோபுரம் ஆகும். ஆனால், எபில் கோபுரம், பிரெஞ்ச் புரட்சியின் நூற்றாண்டு சிறப்பிக்க, கி.பி. 1889ஆம் பாரீஸில் நடைபெற்ற உலக வியாபார பொருட்காட்சிக்காக கட்டப்பட்டது. இதைத் தவிர, பாரீஸில் அமைந்துள்ள, அகலமான வீதிகளும், கண்கவரும் அருங்காட்சியகங்கள், அழகுற வடிவமைக்கப்பட்டுள்ள ஆலயங்கள் என நம்மை தூண்டி இழுக்கும் இடங்கள் பல உள்ளன. வியப்புற வைக்கும் இந்த இடங்களைக் கண்டு கண்கள் களைப்புறும் நேரத்தில், நாவிற்கு சுவையளித்து, வயிற்றை நிரப்பும் தரமான உணவுகளுக்கு அதிலும் குறிப்பாக, பிரெஞ்ச் உணவுகள், அத்தேசத்தின் சமையல் கலையின் மேன்மையை உணர்த்துவதாக இருக்கிறது.

இத்தனை இருந்தாலும், பாரீஸ் செல்பவர்கள், அந்நகரை ஊடறுத்து ஓடும் சியேன் நதியில் ஒரு சிறு தீவில் கட்டப்பட்டுள்ள அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலத்தைக் காணவில்லையென்றால் அவர்கள் பிரான்சு பயணம் நிறைவுபெறவில்லை என்றுதான் கூறவேண்டும்.

பிரான்சில் கிறிஸ்தவர் வேரூன்றுவதற்கு முன், இந்த இடத்தில் கிரேக்க தேவதையான ஜீபிடருக்கு ஒரு ஆலயம் இருந்ததாகவும், அவ்விடத்தில் 12ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் எழுப்பப்பட்டதாக கூறுகிறார்கள். அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம்

கட்டப்படுவதற்கு முன் இதே பகுதியில் ரோம கட்டிடக்கலையில் ஒரு சிறிய ஆலயம் ஒன்று இருந்ததது.



அந்த ஆலயம் பழுதடைந்து, இடப்பற்றாக்குறையும் ஏற்பட, கி.பி. 1163ஆம் ஆண்டு ஆயர் மௌரீஸ் தே சுல்லி அவர்களால் புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிட பணிகள் தொடங்கி, கி.பி. 1260ஆம் நிறைவுபெற்றது. இத்தேவாலமானது பிரென்ச் கோதிக் கட்டிட கலைக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. அதன்பின் கால ஓட்டத்தில் பல்வேறு முறை புதுப்பிக்கப்பட்டது.

ஜீன் தே செயின்ட் விக்டர் என்கிற வரலாற்று அறிஞரின் குறிப்பின்படி, இந்த ஆலயத்தின் அடிக்கல், 1163ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 மற்றும் 25ஆம் தேதிகளுக்கு இடையில், அதாவது 24ஆம் இரவு 25ஆம் அதிகாலையில், நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது. அன்னை மரியாவுக்கு இயேசுவின் பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்ட விழாவானது இந்நாளில் கொண்டாட்டப்படுகிறது. இந்த அடிக்கல் நாட்டு விழாவில் பிரான்சு அரசர் ஏழாம் லூயி மற்றும் திருத்தந்தை மூன்றாம் அலெக்ஸாண்டர் கலந்து கொண்டனர்.

முதல் கட்டமாக ஆலயத்தின் உயரமான பீடப்பகுதியும், அதைச் சுற்றி குருக்கள் அமர்ந்து செபிக்கின்ற இடமும், அதன் இருபுறமும் உள்ள இடமும் கட்டப்பட்டன. கட்டி முடிக்கப்பட்ட பீடப்பகுதியானது கர்தினால் ெ□ன்றி த மௌர்காய் அவர்களால் கி.பி. 1182ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட பணிகளானது, கி.பி. 1182 முதல் கி.பி. 1190 வரை நடைபெற்றது. இப்பணிகளில் ஆலயத்தின் மையபகுதியானது நான்கு பகுதிகளை உள்ளடக்கியதாகக் கட்டப்பட்டது. இப்பகுதியானது பல சன்னல்களை உள்ளடக்கிய மேற்சுவர் கொண்டதாக அமைந்திருந்தது. கி.பி. 1190ல் ஆலய முகப்பிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பணிகள் நடந்து கொண்டிருக்கும் தருணத்திலே, கி.பி. 1185ஆம் ஆண்டு இந்த பேரலாயத்திலிருந்து ெ□ராக்லியன் செசரியா மூன்றாம் சிலுவைப் போருக்கான அழைப்பை விடுத்தார்.





ஊட்டம் பெற்று வளர்ந்து மலர்ந்து புதிய உறவு தொடர்ந்தது இயேசுவின் தியாகத்தால் என்றால் அது மிகையாகாது. அப்பேற்பட்ட மீட்பருக்குத் தாயாக இருப்பது அவரின் அர்ப்பணம் நிறைந்த வாழ்வும் சாந்தம் மிகுந்த வாழ்வும் ஆகும்.

இவ்வாறு நமது மீட்புக்காகத் தன்னையே கையளித்த மீட்பருக்கு மரியா தனது பங்களிப்பை அளித்துள்ளார். இரட்சகரின் மாதாவுக்கு இன்று நம் அனைவரிடமும் கேட்பது என்னவென்றால் இயேசுவின் துன்பத்தில் நாமும் பங்கேற்க வேண்டும். அதுவே நமது கடமையும் பொறுப்பும் ஆகும். இயேசுவின் பாடுகளில் பங்கெடுத்து நமக்கு வரும் துன்பங்களை ஏற்று இறைபாதையில் நடக்க வேண்டும். மரியாவின் உண்மையான பிள்ளைகளாக மாறுவோம்.

மனிதரை மீட்டதில் இயேசுவுக்கு முதல் முக்கியத்துவம் உண்டு. இயேசு ஒருவரே மீட்பர், இரட்சகர் மரியா அல்ல. ஆயினும் மரியாவின் பங்கேற்பு முக்கியமாகும். வேரில்லாத மரம் உயிரோடு இயங்காது. ஒளி இல்லாத உலகம் மகிழ்வில் இயங்காது. இதைப் போலவே கடவுளின் விருப்பமும் மரியாவின் பங்கேற்பு இருக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டு தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். (கலா 4.4-5)

இதுவே அன்னை மரியா மீட்பரின், இரட்சகரின் தாய் என்பதற்கு உண்மையான சான்றாகும். கடவுளின் திட்டத்தை ஏற்று இயேசு கிறிஸ்துவுக்குத் தாயாகும் பொறுப்பை அன்னை மரியா பணிவோடு ஏற்றுக் கொண்டார். எவ்வகையான தடை, கலக்கம், கவலை, கஷ்டம், வேதனை வந்தாலும் அதைத் துணிவுடனும் பணிவுடனும் எதிர்கொள்ள அன்னை மரியா தயாராகினார். எனவே அவர் எல்லோரையும் விட பெரிய உயர்ந்த தாயாம் இரட்சகரின் மாதா என அழைக்கப்பட்டார். அவரே அனைத்து மக்களும் மீட்பு பெறக் காரணமாகவும், வாழ்பவர்களின் தாயாகவும் இருந்து நம்மை உண்மை, அன்பு, நீதி போன்ற உயர்ந்த மதிப்பீடுகளின் வழியில் நடத்தி வருகிறார். அவ்வாறு வாழ நாம் அனைவரும் அன்னை மரியாவிடம் வேண்டுவோம்.

இருந்து மீட்ட மீட்பராக, இரட்சகராக கிறிஸ்து மாறினார். அப்பேற்பட்ட மீட்பரும் இரட்சகருமான கிறிஸ்துவுக்கு அன்னை மரியா தாயாகிய தாய். மரியாவின் கீழ்படிதல், நம்பிக்கை, தாழ்ச்சி மூலம் தன்னை கடவுளின் திட்டத்தோடும் இயேசுவின் மீட்புப் பணியிலும் இணைத்து ஒரு பணியாளராக இருந்தார்.

கடவுளின் மீட்புத் திட்டத்தை இயேசு பிறக்கும் முன்பே அறிந்து வந்தார் அன்னை மரியா. இவ்வாறு அறிந்து தானே முன்வந்து முழு மனதுடன் ஏற்று கிறிஸ்துவுக்கு தாயாக தன்னைப் பணிக்கிறார். இயேசு மீட்பராக இம்மண்ணுலகிற்கு வர அடிப்படைக் காரணம் அன்னை மரியாவின் எளிமையான குணமே ஆகும். இயேசு பிறந்து வளர்ந்து சிலுவையில் மரிக்கும் வரை மரியாவின் பங்கெடுப்பு அதிகமானதால் அவர் இரட்சகரின் தாயானார்.

மனிதர்கள் பலவீனம் உடையவர்கள். கடவுள் பலம் உடையவர். மனிதர்கள் பாவத்தால் வெறுமையிலும் தனிமையிலும் வாழக்கூடியவர்கள், கடவுள் அன்பால் மன்னித்து அனைவரோடும் நட்புறவு கொள்பவர். மனிதர்கள் அன்பற்று, அறிவற்று, நம்பிக்கையற்று, பாவச் சேற்றிலும் அடிமையின் பிடியிலும் கசடான கறையான வாழ்வு வாழ்ந்தபோதும் கடவுள் அவர்களின் பாவத்தை துடைத்து தண்டனையை நீக்கி மீட்பும் வாழ்வும் அளித்தார்.

இவ்வாறு கடவுளின் அன்பை இயேசு கிறிஸ்துவின் வார்த்தை, வாழ்க்கை, போதனை, சாதனை, பாடுகள், உயிர்ப்பு இவற்றின் மூலம் நாம் அறியலாம். இயேசு கடவுளின் அன்பை வெளிக்காட்ட உலகை மீட்க அடிப்படை சாதனமாகவும் கருவியாகவும் விளங்கியவர் அன்னை மரியா ஆவார். மனிதரின் மிட்பு இயேசுவாலும் மரியாவாலும் கிடைத்த அற்புதமான வரம். இது கடவுளின் தன்னலமற்ற அன்பையும், இயேசு கிறிஸ்துவின் பாவமற்ற கீழ்படிதல் தியாகத்தையும் மரியாவின் கறையற்ற கருணையையும் தாழ்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

எனவே அன்னை மரியின்றி இயேசுவின் அர்ப்பணிப்பு, கடவுளின் அவதாரம் இம்மண்ணில் இல்லை. அன்னை மரியின்றி பாவமனம் கொண்ட மனிதருக்கு மன்னிப்பு இல்லை, மறுவாழ்வு இல்லை. மரியா இரட்சகரின் தாயாகியதால் இயேசு இம்மண்ணகம் வந்து அனைத்து மக்களையும் இரட்சித்து மீட்டார். இவ்வாறு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உடைந்த உறவு மறைந்த நட்பு புதுப்பிறப்படைந்து







ஒன்பதாம் லூயி மன்னர், இந்த ஆலயத்திற்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம், கிறிஸ்தவத்தின் பொக்கிசமான, இயேசுவின முள்முடியிலிருந்து ஒரு முள்ளையும், இயேசு அறையப்பட்ட சிலுவையிலிருந்து ஒரு ஆணியையும் மிகுந்த பொருட்செலவில் வாங்கி இவ்வாலயத்தில் வைத்தார்.

பீடத்தின் ஒளி அதிகமாக கிடைப்பதற்காக, இருபுறத்திலும் சிலுவை வடிவிலான பகுதிகள் கட்டப்பட்டன. இவற்றில் ஆறு வளைவுகளை கொண்ட மேற்கூரை அமைக்காமல், நான்கு வளைவுகளை கொண்ட மேற்கூரை அமைக்கப்பட்டது. மேலும், இதன் காரணமாக இம்மேற்கூரை வலிரம பெற்றதாக அமைந்தது. கி.பி. 1196ல் ஆயர் மொரீஷ் இறைவனடி சேர்ந்தார். அவருக்கு பின் ஆயரான யூடஸ் பீடத்தின் இரு பகுதிகளிலும் நடைபெற்று வந்த பணிகளை தொடர்ந்து கண்காணித்து நிறைவுக்கு கொண்டுவந்தார்.



அத்துடன் ஆலயத்தின் வடபுற முகப்பும் நிறைவுபெற்றது. கி.பி. 1208ஆம் ஆண்டு ஆயர் யூடஸின் மறைவுக்குப் பின்னும் பணிகள் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற்றன. கி.பி. 1240ம் ஆண்டளவில் ஆலயத்தின வட கோபுரம் நிறைபெற்றது.

சிலுவை வடிவிலான இருபுறமும்

செழுமையும், கைத்திறனும் பெற்ற சிற்பங்களால் அழகுப் படுத்தப்பட்டன. தென்பகுதியல் புனித ஸ்தேவானின் வாழ்கை வரலாறும், வட பகுதியில் இயேசுவின் குழந்தை பருவமும் செம்மையான வடிவமைக்கப்பட்டு காண்போரின் மனதைக் கவர்ந்தது.

புகழ்பெற்ற கட்டிடகலை நிபுணர்களான பியர் தெ செல்லஸ், ஜீன் ரேவி, ஜீன் தெ பொல்டியேர், ரெய்மெண்ட் தெ டெம்பிள் போன்றோர் ஆலய நிர்மான பணிகளில் ஈடுபட்டு உழைத்தனர். இந்த ஆலயத்தின் மற்றொரு சிறப்பு, 13ஆம் நூற்றாண்டிலேயே ஆலய சுவர்களை தாங்கிப்பிடிக்கும் வெளிப்புற சுவர்களை பறக்கும் சுவர்களாக கட்டினர். இந்த தாங்கிப்பிடிக்கும் சுவர்களுக்கு தரையில் அடித்தளமிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த தாங்கிப்பிடிக்கும் பறக்கும் சுவர்களால் கட்டிடத்தின் சுவர்கள் மெலிதானகவும், அதிக சன்னல்கள் உடையுதாகவும் அமைக்க உதவியாக இருந்தன.

கி.பி. 1323 ல் ஜான் என்பவரால் எழுதப்பட்ட, பாரீஸ் நகரத்தின் புகழ் என்ற நூலில், பாரீஸ் நகரின் புகழ்பெற்ற மூன்று கட்டிடங்களில் ஒன்றாக இத்தேவாலயம் குறிப்பிடபட்டுள்ளது.



மறுமலர்ச்சி காலத்தில் கோதிக் பாணி கட்டிடக்கலை பழமைவாதமாக கருதப்பட்டது. எனவே, ஆலயத்தின் தூண்கள் புதுப்பிக்கப்பட்டு வண்ணமயமான கற்களால் அலங்கரிக்கப்பட்டது. கி.பி. 1548ஆம் ஆண்டு, இப்பேராலயத்தில் உருவ வழிபாடு நடப்பதாக கூறி அதற்கு எதிராக இருந்த குழுவினரால், சில சிலைகள் உடைத்து நொறுக்கப்பட்டன.

கி.பி. 1625ல் இவ்வாலய முகப்பில் ஒரு





# மாதா மன்றாட்டு மாலை



14

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## இரட்சகருடைய மாதாவே

இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர் (லூக் 11:31)

உலகத்தை பாவத்திலிருந்து மீட்கவே இயேசு இம்மண்ணகம் வந்தார். அவ்வாறு தூய்மையான உள்ளம் கொண்ட மீட்பரும் இரட்சகருமான கிறிஸ்துவுக்குத் தாயாக இருப்பது கடவுள் தந்த உன்னதமான கொடை ஆகும். 25.03.1987 அன்று திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் மரியா இரட்சகரின் தாய் என்று அறிக்கையிட்டார். ஏன் அன்னை மரியாவை இரட்சகரின் மாதாவாக அழைக்கிறோம்? உலகின் மீட்புக்காக இயேசு கிறிஸ்துவின் பங்கு எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போலவே அன்னை மரியாவின் பங்களிப்பும் இன்றியமையாதது. நாம் இயேசு கிறிஸ்துவால்தான் மீட்கப்பட்டோம். இருந்தபோதிலும் நமது மீட்புக்கு அடிப்படை காரணம் அன்னை மரியா. அன்னை மரியாவின் தூய்மை நிறை உள்ளமும், கருணை நிறைந்த உள்ளமே, அவர் உலகின் இரட்சகரைப் பெற்றெடுக்கக் காரணமாயிருந்தது.

ஒரு நல்ல செடியிலிருந்து நல்ல மலர்களும் நல்ல கனிகளும்தான் வரும். ஒரு முழுமை நிறை நிலவிடமிருந்து அதிகமான ஒளியும் வெளிச்சமும்தான், வரும். ஒரு துடிப்புமிக்க விசுவாசம் நிறைந்த வீரனிடம் இருந்து வெற்றிதான் வரும். அதுபோலவே தூய்மையான அன்பான அன்னை மரியாவிடமிருந்து தூய்மையான அன்பான இயேசு கிறிஸ்துதான் வருவார். மத்தேயு நற்செய்தியில், மரியாவுக்குப் பிறக்கபோகும் குழந்தை, இயேசு என்று அழைக்க யோசேப்புக்கு சொல்லப்பட்டது. ஏனெனில் அவர் மக்களை பாவத்திலிருந்து மீட்பார் (மத் 1,21)

இயேசுவின் மீட்புப் பணியில் மரியாவின் பங்களிப்பு மிகவும் அதிகமாக இருக்கின்றது. இயேசுவைத் தனது வயிற்றில் சுமந்து அவரைப் பெற்றெடுத்து அவரை அன்பிலும் பண்பிலும் வளர்த்து அவரை நல்வழியில் நடத்தினார். இறுதியில் அவர் தன் உயிரையே பலியாகக் கொடுத்து சிலுவையில் மரித்தார். இதன் மூலம் உலகப் பாவத்தில்



## இறையடியார் சகோதரி ஓர்சோலா தோணாதி (Sr. Orsola Donati) OSM




அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இறையடியார் சகோதரி ஓர்சோலா அக்டோபர் 22, 1849 அன்று போலோஞ மாகாணத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் வின்சென்சோ தோணாதி மற்றும் மரியா. சிறுவயதிலிருந்தே அவர் பூதிரியே (Budrie) கிராமத்தில் உள்ள பங்கு பணிகளிலும் மற்றும் சமூக சேவைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு சிறப்பாக இறைபணி செய்து வந்தார். அங்கு அவர் புனித கிளெலியாவை (Clelia Barbieri) முதன் முதலில் சந்தித்தார் பின்னர் இருவரும் ஒரே மாதிரியான எதிர்நோக்கு கொண்டதை அறிந்து கொண்டார். இதனால் புனித கிளெலியா நெருங்கிய தோழியானார். இரண்டு இளம் பெண்களுக்கும் ஒரே இறை நம்பிக்கையும் மற்றும் வாழ்வின் லட்சியத்தையும் கொண்டவர்களாக இருந்ததால், இருவரின் விருது வாக்கும்: ஆன்மிக மற்றும் சமூக பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டு ஒன்றாக வாழ வேண்டும் என்பதாக இருந்தது. மே 1, 1868 இல், ஓர்சோலா, கிளெலியா மற்றும் இரண்டு தோழிகள் முதன் முதலில் இணைந்து சிறிய மடத்தை ஆரம்பித்தனர். புனித கிளெலியா தனது வேலையை தனக்கு அடுத்து செய்யக்கூடிய ஒருவராக ஓர்சோலாவை அடையாளம் கண்டுகொண்டார், அதனால் அந்த இளம் பெண்ணின் மீது தனது கவனத்தைச் செலுத்தினார். அவள் அவளிடம் முற்றிலும் நம்பிக்கை வைத்தாள், அவள் ஆன்மா அனுபவித்த துன்பங்களைப் பற்றி கூட பேசினாள். அவர் நோய்வாய்ப்பட்டபோது, புனித கிளெலியா நேரடியாக ஓர்சோலாவிடம் குழுவை வழிநடத்தவும், எதிர்காலத்தில் தலைமைப் பொறுப்புக்கு தன்னைத் தயார்படுத்தவும் செய்தார். புனித கிளெலியா காசநோயால் பாதிக்கப்பட்டு ஜூலை 13, 1870 இல் இறந்தார். அவளுக்குப் பின், அவள் கூறியபடியே, ஓர்சோலா அனைத்து பொறுப்புகளையும் எடுத்துக்கொண்டு சுமார் 65 ஆண்டுகள் இந்த சிறு சபையை பெரும் வளர்ச்சிக்கு எடுத்துச் சென்றார். அவரது நீண்ட கால வழிநடத்தும் பணியில் முப்பத்தி நான்கு மடங்களை நிறுவிய மகிழ்ச்சியான அனுபவத்தைப் பெற்றார். இருப்பினும், இது அனைத்தும் எளிதானதாக இருந்ததில்லை . 1913 ஆம் ஆண்டு அவரது பேராயர் (பின்னர் திருத்தந்தை 15 ஆம் ஆசிர்வாதப்பராக ஆனவர்), ஓர்சோலா மீது எதிர்மறையான கருத்தை வெளிப்படுத்தினார். இதனால் அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். அவளைப் பற்றி கூறப்படுவது உண்மையல்ல என்று தெரிந்திருந்தும், பேராயர்க்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஒரு பிற்பகல் பேராயர் அவளை தேடி அறிவிக்கப்படாமல் வந்தார். அவர் ஓர்சோலாவிடம் பேசி என்ன நடந்தது என்பதற்காக அவளிடம் மன்னிப்பு கேட்க விரும்பினார். இவ்வாறு ஆன்மிக மற்றும் மனித முதிர்ச்சியும் பெற்றவர் நம் இறையடியார் ஓர்சோலா. 1934 ஆம் ஆண்டில், வத்திக்கான் வியாகுல அன்னையின் சிறிய சகோதரிகளின் சபையை (Litte Sisters of Our Lady of Sorrows) அங்கீகரித்தது. இந்த ஒப்புதல் அன்னை ஓர்சோலாவின் வாழ்க்கையை மகிழ்ச்சியான முடிவுக்கு கொண்டு வந்தது. பிப்ரவரி 9, 2000 அன்று மறைமாவட்ட அளவில் அவரை புனிதராக்கும் முயற்சி தொடங்கியது. இது ஏப்ரல் 6, 2003 அன்று முடிவடைந்தது. இதை கண்காணித்த வத்திக்கான் 2021 ஜூன் மாதம் அன்னை ஓர்சோலா வணக்கத்துக்குரியவர் தகுதிக்கு உயர்த்த அனுமதி தந்ததுள்ளது.







நீரூற்று ஒன்று நிறுவப்பட்டது. சியேன் நதியிலிருந்த தண்ணீர் எடுக்கபட்டு பிரவாகமாக ஓடியது, பாரீஸ் நகர மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், இறை ஆசீரின் அடையாளமாகவும் திகழ்ந்தது.


கி.பி. 1699ஆம் ஆண்டு பிரான்சு மன்னர் 14ஆம் லூயி தன் தந்தை 13ஆம் லூயியின் விருப்பத்தை நிறைவேற்ற ஆலயத்தை முழுமையாக புதுப்பித்தார். இப்பணிக்காக அவர் ராபர்ட் தே கோத்தே என்பவரை நியமித்தார். ராபர்ட் பீடமுழுமையும் புதுப்பித்தார். ஆலயத்தின் உட்புறம் இருந்த கல்லறைகளை நீக்கினார். பீடத்தில் வியாகுல அன்னையிடம் வேண்டும் 13ம் மற்றும் 14ம் லூயி மன்னர்களின் உருவங்களை பொறித்தார். அன்று புதுபிக்கப்பட்ட அப்பலிப்பீடம் இன்றளவும் மாறாமல் அப்படியே பராமரிக்கப்படுகிறது. ஏறக்குறைய, 325 ஆண்டுகளாக இப்பீடம் புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# I குறிப்பேடு



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

3) அவர்கள் மூதாதையர் குடும்பங்களின் தலைமுறை அட்டவணைப்படி போர் அணிகளில் முப்பத்தாறாயிரம் வீரர்கள் ............

4) ................. புதல்வர்: ஆரோன், மோசே, மிரியாம்.

7) ஆண்டவரையும் ......... ஆற்றலையும் தேடுங்கள்: அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்!

8) தாவீது இஸ்ரயேலர் எல்லாருக்கும் அரசராய் இருந்தார். அவர் தம் ........... அனைவருக்கும் நீதியும் நியாயமும் கிடைக்கச் செய்தார்.

10) எலயாசர் ............. அவருக்குப் புதல்வியரேயன்றிப் புதல்வர் எவரும் இல்லை. அவர் சகோதரராகிய கீசின் புதல்வர் அவர்களை மணந்து கொண்டனர்.

11) ............... மாதத்தில், எட்டாம் படைப்பிரிவுக்கு சர்கியைச் சார்ந்த ஊசாயரான சிபக்காய் தலைவராய் இருந்தார். அவர் பிரிவில் இருபத்து நாலாயிரம் பேர் இருந்தனர்.

**இடமிருந்து வலம்**

1) ........... மைந்தர்: ஈசாக்கு, இஸ்மயேல்: அவர்களுடைய தலைமுறைகள்பின்வருமாறு:

2) சீமோனின்............ அம்னோன், ரின்னா, பென்கனான், தீலோன், இசீயின் புதல்வர், சோகேத்து, பென்சோகேத்து.

5) அங்கே வந்த கொள்ளைக்காரரை முறியடிக்க .............. தாவீதுக்குத் துணை நின்றனர். ஏனெனில் இவர்கள் அனைவரும் வலிமைமிகு வீரர்கள்: ஆற்றல்மிக்க படைத்தலைவர்கள்.

6) செக்கரியா, அசியேல், செமிராமோத்து, எகியேல், உன்னி, எலியாபு, மகசேயா, பெனாயா, ஆகியோர் ............ இசையில் தம்புருகளை வாசிப்பவர்கள்.





வரும் விண்மீன்களாக நமது விசுவாசப் பயணத்தைத் தொடர்ந்திட தொடரும் இப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமைத்தளையாலே அழிந்த எருசலேமுக்கும், அல்லல்பட்ட இஸ்ராயேலருக்கும் ஆறுதல் மொழிகளாக எழுதப்பட்டன. எருசலேம் புத்துயிர் கொள்ளும் என்று நம்பிக்கையூட்டும் இன்றைய வாசகம் இயேசுவின் இறைக்காட்சியால் அனைத்து மக்களும் வாழ்வு பெறுவர் என்பதைக் காட்டுகிறது. எருசலேமின் மகிமையைக் கண்டு புறவினத்தார் அதை நோக்கி ஓடி வந்ததுபோல, பெத்லகேமில் இயேசுவின் ஒளியைக் காண கீழ்த்திசை ஞானிகள் வந்ததுபோல, நம்முடைய நடை, உடை, பாவனைகளிலே, சொல் செயல்களிலே கிறிஸ்துவைக் காண, கண்டு அனுபவிக்கப் பிற மக்கள் வரவேண்டும். இதற்கான வரம் வேண்டியவர்களாய் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கீழ்த்திசை ஞானிகள் பாலன் இயேசுவைக் கண்டு ஆராதித்தது ஒரு அடையாளம், ஒரு மறைபொருள். யூதருக்கு மட்டும் இயேசு அரசரன்று மக்களினத்தார் அனைவருக்கும் அவர் மன்னர் என்பதை உணர்த்தும் வண்ணம் ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா அமைகிறது. பவுல் அடியாரும் இம்மறைபொருளின் கருத்தை அறிந்து, புறவினத்தாருக்காகப் பாடுபட்டு உழைப்பதை இவ்வாசகம் விளக்குகிறது. கவனமுடன் செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் மூன்று கீழ்த்திசை ஞானிகளுக்கு வழிகாட்டிய விண்மீனைப்போல ஒருவர் ஒருவருக்கு வழிகாட்டிகளாக இருந்து ஒளியின், உண்மையின் மக்களாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! மூன்று ஞானிகள் வெறும் பரிசுப் பொருட்கள் மட்டுமல்ல, தங்களையே முழுமையாக உமக்கு அர்ப்பணித்தது போல, நாங்களும் எங்கள் சொல், செயல், உடல், ஆவி அனைத்தையும் உமக்கு அர்ப்பணித்து வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா! விண்மீன் மறைந்தவுடன் ஞானிகள் கடவுளையும் தங்களையும் சபித்துவிட்டு வீடு திரும்பவில்லை. மாறாக மற்றவர்களது வழியைத் தேடினர். நாங்களும் எங்களது வாழ்வுப் பயணத்தில் தொடர் துன்பங்கள் மற்றும் வேதனைகள் வரும்போது எங்களைவிட ஆன்மீகத்தில் ஆழம் கண்டவர்களின் உதவியை நாடி விசுவாசப் பயணத்தில் எம் இலட்சியத்தை அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! புனித பவுலை போல நாங்களும் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சாட்சியம் பகிரவும், எல்லோரும் இறைவனால் மீட்கப் பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவை தலையாகக் கொண்டுள்ள திருஅவை என்கின்ற இறைக்குடும்பத்தின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து அனைவரும் ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! எங்களது கிறிஸ்தவ குடும்பங்கள் உமது திருக்குடும்பத்தை பிரதிபலிக்கின்ற குடும்பங்களாக இருந்து திருக்குடும்பத்தில் நிலவிய தன்னலமற்ற அன்பை பிரதிபலித்து இறை அச்சத்தோடு வாழ்கின்ற குடும்பங்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா! பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழ்கின்ற குடும்பங்கள் உமது அன்பினால் இணைக்கப்பட்டு எப்போதும் மகிழ்ச்சியின் குடும்பமாக மாறிடத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! எம் குடும்பங்கள் ஒவ்வொன்றும் இறையருளும், இறையன்பும் நிறைந்த குடும்பமாக மாறி திருக்குடும்பத்தில் உள்ள ஒற்றுமை, மகிழ்ச்சி, சமாதானம் நிறைந்த குடும்பங்களாக வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருக்காட்சிப் பெருவிழா 05-01-2025

எசாயா 60:1-6; எபே 3:2-3,5-6; மத் 2:1-12

### முன்னுரை

வாழ்க்கை ஒரு பயணம். குறுகிய கால வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு மேடு பள்ளங்களை சந்திக்கிறோம். இவைகளுக்கு மத்தியில் விடாமுயற்சியோடு போராடி இறுதி இலக்குவரை உள்ளத்தில் உண்மையாக உறைந்திருக்கின்ற உன்னதரான இறைவனை அடைவதே பயணத்தின் நிறைவாகும். மூன்று ஞானிகள், துன்ப துயரங்களைக் கடந்து இறுதியில் இயேசுவைக் கண்டு மகிழ்ந்தனர். மீட்பு என்பது இஸ்ராயேல் மக்களின் தனி உடமை அல்ல, மாறாக அது எல்லா இனத்தாருக்கும் உரிய பொதுவுடமையாகும். பிற இனத்தவரும் இறைவனுடைய மீட்புக்கு உரியவர்கள் என்பதுதான் இன்றைய பெருவிழாவின் மையக்கருத்தாகும்.

மாந்தர் அனைவரும் இறைவனைத் தேடி வந்து அவரைக் கண்டுகொள்வார்கள் என்ற கருத்தைத்தான் இன்றைய மூன்று வாசகங்களும் வலியுறுத்துகின்றன. வானதூதரின் செய்தியைக் கேட்ட இடையர்கள் தேடிச் சென்று இறைவனை சந்தித்தனர். விண்மீன் அடையாளத்தைக் கண்ட கீழ்த்திசை ஞானிகள் தேடிச் சென்று காணிக்கை செலுத்தி இறைவனை வணங்கி மகிழ்ந்தனர். ஆலயத்தில் சிமியோன், அன்னா இறைவனைக் கண்டுகொண்டனர். இவ்வாறு இறைவனின் மீட்பு பலருக்கு வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இயேசுவின் பிறப்பு அனைவருக்கும் உரியது என்பதையே புறவினத்து ஞானிகள் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. மீட்பு அனைத்து மக்களுக்கும் உரியதை என்பதை உணர்ந்து, நமது சொல்லால், செயலால் பிற இன மக்களையும் கிறிஸ்துவிடம் அழைத்து





9) காத்து ஊரிலிருந்த அரக்கருக்குப் பிறந்த ............ தாவீதாலும் அவர் அலுவலராலும் சாகடிக்கப்பட்டனர்.
12) எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, உம் புனித பெயருக்கென்று உமக்குக் கோவில் கட்டுவதற்கு நாங்கள் சேர்த்து வைத்துள்ள இந்தப் பெருங்குவியல் முழுமையும் உம் கையிலிருந்து ............. உமக்கே உரியது

### மேலிருந்து கீழ்

1) காலேபின் மறுமனைவி ஏப்பா .......... மோசாவையும், காசேசையும் பெற்றெடுத்தார். ஆரானுக்குக் காசேஸ் பிறந்தார்.
4) சவுலுக்கு எதிராய் அவர்கள் கடும்போர் புரிந்தனர். வில்வீரர் அவரைக் கண்டு கொண்டதும் ................ அவரைக் காயப்படுத்தினர்.
5) கடவுளின் பேழை ஓபேது ஏதோம் வீட்டில் அவர் வீட்டாரோடு மூன்று மாதம் ............ அந்நாளில் அவர் வீட்டாருக்கும் அவருக்கு உரிய அனைத்திற்கும் ஆண்டவர் ஆசி வழங்கினார்
8) இவற்றின்பின் அம்மோனியரின்............ நாகாசு இறந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் அரசனானான்.
9) போருக்குத் தகுந்த ஆள்களின் தொகையை யோவாபு தாவீதிடம் அறிவித்தார். வாளேந்தும் வீரர் இஸ்ரயேலில் பதினோர் இலட்சம் பேரும், யூதாவில் நான்கு ........... எழுபதினாயிரம் பேரும் இருந்தனர்.
11) பின்பு அரசர் தாவீது ................நின்று கூறியது: என் சகோதரரே! என் மக்களே! எனக்குச் செவி கொடுங்கள். நம் கடவுளின் கால்மணையாகிய ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையை வைப்பதற்குக் கோவில் ஒன்றைக் கட்டுவதற்கு என் மனத்தில் எண்ணினேன்: அதைத் கட்டுவதற்குரிய முன்னேற்பாடுகளையும் செய்தேன்.

### கீழிருந்து மேல்

2) இவர்கள் அனைவரும் தாவீதின் புதல்வர்: மற்றும் இவர்களின் சகோதரி தாமார்: இன்னும் மறுமனைவியர், மூலம், அவருக்கு வேறு .......... இருந்தனர்.
3) இவர்கள் யாவரும் யூதா அரசன் யோத்தாம் காலத்திலும் .......... அரசன் எரொபவாம் நாள்களிலும் தலைமுறை அட்டவணையில் பதிவு செய்யப்பட்டனர்.
6) இதனால், ஆண்டவர் இஸ்ரயேலின் மேல் தம்மை அரசராக உறுதிப்படுத்தினார் என்றும் அவருடைய மக்களாகிய இஸ்ரயேலின் பொருட்டுத் தமது அரசை மிகவும் சிறந்தோங்கச் செய்தார் என்றும் தாவீது ........... கொண்டார்
7) ஆயினும் கடவுளே! ............ உமக்குச் சிறியதாய்த் தோன்றிற்று: உம் அடியானுடைய வீட்டுக்கு வரவிருக்கும் பெரும் சிறப்பைப் பற்றி வெளிப்படுத்தினீரே! கடவுளாகிய ஆண்டவரே! நீர் ஏற்கெனவே என்னைப் பெரியவனாக மதித்து வருகிறீர்
10) சீட்டு விழுந்த முறை: முதல் சீட்டு ஆசாபு குடும்பத்தின் யோசேப்புக்கு: .......... செதலியா, அவர் சகோதரர்களும் அவர் புதல்வர்களும் ஆகிய பன்னிருவர்க்கும்,
12) தாவீது தம் அரண்மனையில் வாழ்ந்து ............ நாளில் இறைவாக்கினர் நாத்தானை நோக்கி. இதோ நான் கேதுரு மரத்தாலான அரண்மனையில் வாழ்கிறேன். ஆனால் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையோ திரைக்கூடாரத்தில் இருக்கிறதே என்றார்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-12-2024

# என்ன தவம் செய்தேன்

19



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

ஏகமகன் பூமி வாசம்
ஏழை என்னில் நேர
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
வானதூதன் வந்து என்னை
வாழ்க என்று வாழ்த்த
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
ஆண்டவரின் சிந்தை எந்தன்
அங்கம் வந்து தங்க!
ஏன்ன தவம் செய்தேன்?
ஏன்ன வென்று சொல்வேன்?
பேதை எந்தன் மடியினிலே
பாலகனாய் வந்து கொஞ்ச
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
விண்ணகத் தூதர் கூட்டம்
உன்னதர் அவரைப் பாடகேட்க!
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
மண்ணக மாந்தர் கூட
மண்டியிட்டு அவரைப் போற்றிமகிழ!
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
ஆண்டவரே வந்து என்னை
அம்மா என்று அழைக்க!
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?
பாலூட்டி சீராட்டி வளர்க்கும்
பாக்கியம் எனக்கு சேர!
என்ன தவம் செய்தேன்?
என்ன வென்று சொல்வேன்?





நம்பிக்கை தருகின்ற நிகழ்வாக இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருக்குடும்பப் பெருவிழா ௨௯-௧௨-௨௦௨௪
## ௧சாமு ௧:௨௦-௨௨,௨௪-௨௮; ௧யோவா ௩:௧-௨,௨௧-௨௪; லூக் ௨:௪௧-௫௨

### முன்னுரை

குடும்பம் என்பது மனிதனை உருவாக்கும் பல்கலைக் கழகம். உறவைக் கற்றுக்கொடுத்து உறவால் வாழ்வு தரும் தொட்டில். குடும்பம் மனித வாழ்க்கைக்கு ஒரு அத்தியாவசியத் தேவை. எனவேதான் கடவுள் ஆதாமை ஏவாளோடு இணைத்து வைத்து ஆசீர்வதித்தார், இயேசுவையும் ஒரு குடும்பத்தின் வழியாக அறிமுகப்படுத்தினார். குடும்பம் பிறர்மீது நம்பிக்கை கொள்ளவும், பிறருக்கு நம்பிக்கை தரவும், சமூகத்தின் தலைவர்களை உருவாக்கும் படைப்புக் கூடமாகும். கடவுளையும் மனிதனையும் ஓரிடத்தில் உறைய வைக்கும் ஆலயம், கடவுளுக்குரிய மக்களாய் வாழும் குட்டி திருஅவை. அதே சமயத்தில் சவால்கள் நிறைந்தது, பிரச்சனைக்குரியது, பல்வேறு துன்பமும் மகிழ்ச்சியும் கலந்தது, சுமைகளும் சுகங்களும் நிரம்பியது. சவால்களையும் சோதனைகளையும் கடந்து சாதனை படைத்தது திருக்குடும்பம். பல துன்பங்களுக்கு மத்தியிலும் திருக்குடும்பம் உறுதியோடும் மகிழ்வோடும் இருந்ததற்கு காரணம், இறைவனின் பிரசன்னம் அவர்களோடு இருந்ததேயாகும். இறைவனில் இணைந்து வாழ்ந்தால் கணவன் மனைவி இருவருக்குமிடையே இருக்கும் பாசப்பிணைப்பு எல்லா துன்பங்களையும் எதிர்கொள்ள சக்தியைத் தருகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள பாச உணர்வானது பல சாதனைகளைப் படைக்க பிள்ளைகளுக்கு சக்தியை உற்பத்தி செய்கிறது. அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திருக்குடும்பமே. இத்திருக்குடும்பத்தின் மாதிரியை நாமும் நமது குடும்பங்களில் பின்பற்றி இறையருளோடும் ஆசியோடும் தொடர்ந்து வாழ்ந்திடத் தேவையான அருள்வரங்களை இப்பலியில் கேட்டு மன்றாடுவோம்.

### முதல் வாசக முன்னுரை

கருவுற இயலாதிருந்த அன்னா மகப்பேறு பெற்று ஆண்டவரை ஏத்திப் போற்றுகிறார். அதோடு ஆண்டவருக்கென்றே அக்குழந்தையை அர்ப்பணிக்கிறார். அன்னா – எல்கானா – சாமுவேல் குடும்பம் நம் குடும்பங்கள் அனைத்திற்கும் முன்மாதிரியாகக் காட்டப்படுகிறது. சாமுவேல் வாழ்நாளெல்லாம் ஆண்டவருக்கு சொந்தமாயிருப்பான் என்றாள் அன்னா. பிள்ளைகள் பெற்றோருக்குச் சொந்தம். பிள்ளைகளும் பெற்றோரும் இறைவனுக்கு சொந்தம். கடவுளின் இந்த உரிமைக்கு குறுக்கே நிற்பது தவறு என்பதை உணர்ந்து நம்மையும் இறைவனிடத்தில் அர்ப்பணிக்க இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைமக்களாக வாழ வேண்டும். இறைவனுக்கே உரிய தனிப்பண்பாகிய அன்பு நம்முடைய வாழ்வை ஆட்கொள்ள வேண்டும் என்கிறார் யோவான். திருக்குடும்பத் திருநாளன்று நாம் அனைவரும் இறைவனின் பெருங்குடும்பத்துப் பிள்ளைகள் என்பதை மறக்காமல் இருக்க இவ்வாசகம் தரப்பட்டுள்ளது. கவனமுடன் செவிகொடுப்போம்.

நடைபெறுகின்றன. இதை Mass Production என்று அழைக்கின்றோம். நமது சிந்தனைகள் பெரிய பெரிய நகரங்கள், உற்பத்தி மையங்கள் ஆகியவற்றையே நாடி வருகின்றன. ஆனால் உண்மை என்னவென்றால், இப்படிப்பட்ட ஒட்டுமொத்த உற்பத்தி முறையால் ஏழ்மை அதிகமாகின்றதேயொழிய குறைந்தபாடில்லை. இதற்கு மாறாக சிறிய அளவிலான ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட கிராமங்களை மையப்படுத்தும் போதுதான் உண்மையான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் நாம் பார்க்க முடியும்.

ஏறத்தாழ இதையொட்டிய ஒரு சிந்தனையைத்தான் இன்றைய வாசகங்கள் நமக்குத் தருகின்றன. பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வு முறை அனைத்தும் எருசலேம் நகரைச் சுற்றியே இருந்த நிலையில், கடவுள் ஓரங்கட்டப்பட்ட, மிகச்சிறியதாய் இருக்கின்ற எளிமையான பெத்லகேமைத் தேடி வருகின்றார். எனவே எளிமையிலும், ஏழ்மையிலும், தாழ்ச்சியிலும் இறைவனை தேடுவோம். அதன் வழியா இறை மீட்பை பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வு முறை அனைத்தும் எருசலேம் நகரைச் சுற்றியே இருந்தது. எருசலேம் நகரம் இறைவன் வாழும் இடமாக, இறைவனை வழிபட ஏற்ற இடமாகக் கருதப்பட்டது. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் மீக்கா இறைவாக்கினர் தோன்றி இறைவனின் செய்தியை முன்னறிவிக்கின்றார். மக்களின் வழிபாட்டு மையமாக இருந்த எருசலேமை இறைவன் ஒதுக்கிவிட்டு, ஓரங்கட்டப்பட்ட மிகச்சிறியதாய் இருக்கின்ற எளிமையான பெத்லகேமைத் தேடி வருகின்றார் என்ற செய்தியை சொல்லுகிறார். வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் பிறப்பு மனுக்குலத்திற்குப் புதுவாழ்வு கொணர்ந்தது. பழையது கழிந்தது, புதியது மலர்ந்தது. பழைய பலிமுறைகள், வழிபாட்டுச் சடங்குகள், புதிய பலிக்கு இடமளிக்கின்றன. இப்புதிய பலியே இயேசுவின் கீழ்படிதல். ஏழ்மையுள்ள இதயம், தாழ்ச்சி, கீழ்படிதல், பணிந்து நடத்தல், இவையன்றி நம்முடைய பலிகளாலும், செபங்களாலும் பலனில்லை. எனவே கீழ்படிதலின் வழியாக இறைமீட்பு பெற இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கீழ்படிதலின் வழியாக இறைத்திருவுளத்தை அறியவும், அத்திருவுளத்தை நிறைவேற்றவும் தேவையான அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! நாங்கள் ஒவ்வொருவரும் ஏழை எளிய மக்களில் உம்மை காணவும் அதன் வழியாக உமது இறையாட்சியை இவ்வுலகில் கட்டி எழுப்பிட எங்களுக்குத் தேவையான உமது அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா! கீழ்படிதல்தான் இறைவனுக்கு கிறிஸ்து தந்த பலியென்பதை ஏற்று நாங்களும் உமது வார்த்தைக்கு கீழ்படிவதன் வழியாக உமது மீட்பையும், அருளையும் பெற்றிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா! உமது மகனின் பிறப்பு இச்சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கும், விளிம்பு நிலையில் இருப்பவர்களுக்கும்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

## திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு (08-12-2024)

பாரூக் 5:1-9; பிலி 1:4-6,8-11; லூக் 3:1-6

### திருப்பலி முன்னுரை

திருவருகைக் காலம் தவக்காலத்தைப் போன்று மனமாற்றத்தின் காலம். திருவருகைக் காலத்தின் தலைசிறந்த போதகரான திருமுழுக்கு யோவான் நம்மை மனமாற்றத்திற்காக அழைக்கின்றார். இறைவாக்கினர் எசாயாவை மேற்கோள் காட்டி பள்ளத்தாக்குகள் நிரப்பப்பட்டு, மலைகளும், குன்றுகளும் தாழ்த்தப்பட்டு, கோணலானவை நேராக்கப்பட்டு, கரடு முரடானவை சமதளமாக்கப்பட வேண்டும் என்கிறார். பேராசை என்னும் பள்ளத்தாக்கு நிரப்பப்பட வேண்டும், ஆணவம் என்ற குன்று தாழ்த்தப்பட வேண்டும், நேர்மையற்ற கோணலான வாழ்வு நேரிய செம்மையான உறவாக மலர வேண்டும். குறிப்பாக இன்றைய மனிதர்களை ஆட்டிப் படைக்கும் பேராசை என்னும் பள்ளத்தாக்கு நிரப்பப்பட வேண்டும். அதற்கு மனமாற்றம் அவசியம். எனவே நிலையில்லா உலக உறவுகளிலும், பொருட்களிலும் பற்று கொள்ளாமல், இறைவனை பற்றிக்கொண்டு வாழும்போது நமது வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும், நீதியும் கிடைக்கும் என்ற நம்பிக்கை நிறைந்த புரிதலோடு இத்திருப்பலியில் பங்குபெற்று இறையாசியை பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

பாபலோனிய அடிமைத்தளைக்குப் பின், எருசலேம் நகரானது, 'நீதியின் அமைதி, இறைப்பற்றின் மகிமை' என்ற புதிய பெயரை பெறுகிறது. நீதியின் கடவுள் எருசலேமை நீதியெனத் தம் பெயராலே அழைக்கின்றார். மகிமையின் கடவுள் எருசலேமுக்கு மகிமை என்று தம் பெயரையே சூட்டுகின்றார். கடவுள் நாமாகிறார், நாம் கடவுளாக வேண்டுமென்று விரும்புகிறார். அவரோடு இரண்டறக் கலந்து ஒரு வாழ்வை நாம் வாழ நமக்கு அழைப்பு விடுக்கின்றார். அவ்வழைப்பை செயல்படுத்திட இறைவன் அருள் வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

புனித பவுல் அடியார் பிலிப்பு நகர கிறிஸ்தவர்களுக்காக, அவர்கள் மறைபரப்புப் பணி செய்வதற்காக செய்த சேவைகளைக் குறித்து நன்றி கூறுகின்றார். அவர்கள் மேலும் இறைப்பற்றிலும் பிறரன்பிலும் வளர வேண்டுமென்று மன்றாடுகின்றார். நாமும் இத்திருவருகைக் காலத்தில் இறைப்பற்றிலும் பிறரன்பிலும் வளர இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய நாங்கள் அனைவரும் இத்திருவருகைக் காலத்தல் இறைப்பற்றிலும் பிறரன்பிலும் வளர்ந்து உமது இறையரசை கட்டியெழுப்பும் கருவிகளாக எங்களை மாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! நாங்கள் அனைவரும் பொருளாசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர் என்னும் உமது இறைவார்த்தையை ஏற்று, இருப்பதில் மனநிறைவும், இருப்பதை பிறரோடு பகிர்ந்து வாழ்வதில் மகிழ்ச்சியும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா! தலைசிறந்த போதகரான திருமுழுக்கு யோவான் விடுக்கும் மனமாற்றத்திற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டு நாங்கள் எங்களது பாவ வாழ்வை விட்டுவிட்டு எங்களது மனமாற்றத்தின் வழியாக அமைதியையும் மகிழ்ச்சியையும் அடைய துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! மன நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் அடிமை நிலையில் இருந்த இஸ்ராயேல் மக்களுக்கு பாரூக்கு இறைவாக்கினர் வழியாக மகிழ்ச்சியின் நற்செய்தியை வழங்கியது போல இன்று பல்வேறு தீமைகளுக்கு அடிமையாக இருக்கும் உம் மக்கள் உமது திருவருகை நம்பிக்கை, அமைதி, மகிழ்ச்சி தருகின்ற நற்செய்தியாக இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக்காலம் 3 ஆம் ஞாயிறு 15-12-2024
## செப் 3:14-18; பிலி 4:4-7; லூக் 3:10-18

### முன்னுரை

'எப்போதும் மகிழ்ச்சியாய் இருங்கள். ஞானியாக மாறுவதற்கான வழி அதுவே' என்கிறார் கொலோட். திருஅவையானது திருவருகைக்காலம் மூன்றாம் ஞாயிறை 'மகிழ்ச்சியின் ஞாயிறு' என்று அழைக்கின்றது. இன்றைய வழிபாடும் நாம் மகிழ்ச்சியாக வாழ அழைப்புவிடுக்கின்றது. பாபிலோனிய அடிமைத்தனத்தில் உழன்ற இஸ்ராயேல் மக்களை மகிழ்ச்சியால் ஆர்பரிக்கும்படி இறைவாக்கினர் செப்பனியா கூறுகிறார். புனித பவுலடியாரும், 'மகிழுங்கள், மீண்டும் மகிழுங்கள்' என்கிறார். நவீன மனிதர்களாகிய நாம் அறிவியல், பண்பாடு, தொழில்நுட்பம், உளவியல் என்று பல தளங்களில் வளர்ச்சியடைந்திருப்பதாக மார்தட்டிக் கொண்டாலும் மகிழ்ச்சி மட்டும் எட்டாக் கனியாக இருந்துகொண்டே இருக்கிறது. இன்றைய இளைய தலைமுறையினர், மகிழ்ச்சி என்பது தாம் அனுபவிக்கும் இன்பத்தில்தான் உள்ளது என்று எண்ணி இன்பம் தருகிறவற்றை அதிகமாக தேடுகின்றனர். ஆனால் மகிழ்ச்சி இன்பத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டுதல்ல என்பதே அனுபவப்பூர்வமான உண்மை. உண்மையான மகிழ்ச்சியை நாம் பெறுவதற்கான வழியை இன்றைய நற்செய்தி சுட்டிக்காட்டுகின்றது. இந்நற்செய்தி உணர்த்தும் பண்புகளை நமது வாழ்வில் கடைபிடித்தால் நிச்சயமாக நாம் மனம்மாறிய மக்களாக மகிழ்ச்சியோடு வாழ முடியும். இறைவன் தரும் மகிழ்ச்சியை நமதாக்கி பிறரோடு பகிர்ந்து வாழும் வரம் வேண்டியவர்களாய் இப்பலியில் பங்கெடுப்போம்.

### முதல் வாசக முன்னுரை

எருசலேமுக்கு விடுதலை கிடைத்ததை எண்ணி, பாபிலோனிலிருந்து மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குத் திரும்பியதை எண்ணி ஆண்டவர் அளவற்ற மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கின்றார். களி நடனம் புரிகிறார். ஆண்டவர் நடனமாடுவதாகக் கூறுவது விவிலியத்திலே இங்கு மட்டுமே காணப்படுகிறது. இறைவனின் படைப்பு, காப்பு, மீட்பு வேலைகளை நினைத்து நாமும் மகிழ்வோம். சிறப்பாக மீட்பளிப்பதற்காக பாலன் இயேசு பிறக்க இருக்கும் இந்நாட்களிலே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோம், களிநடனமாடுவோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

வாழ்க்கையில் துன்பங்கள் இருப்பது நமது அன்றாட அனுபவம். புனித பவுல் அடியார் சிறையில் அடைபட்டு வாடினார். பிலிப்பியரோ திருமறையைப் பின்பற்றியதற்காக அளவற்ற அல்லல்கள் உற்றார். எனினும் ஆண்டவரின் இரண்டாம் வருகை அண்மையிலிருப்பதைக் குறித்து, பவுல் அடியார் தம் துன்பத்திலும் மகிழ்ச்சியாயிருந்ததுபோல நாமும் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறார். 'அகமகிழுங்கள்' என்று திரும்பவும் கூறுகிறார். இம்மகிழ்ச்சி உலகப் பொருட்கள் மேல் கொண்ட மகிழ்ச்சியன்று. மாறாக ஆண்டவரோடு அவரது வருகையை நினைத்து மகிழும் மகிழ்ச்சி என்பதை எடுத்துக்கூறும் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் பெற்றுக்கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை என்ற பவுலின் கூற்றை ஏற்று, பகிர்வு மட்டுமே நிறைவையும், நிம்மதியையும், வாழ்வையும், வளமையையும் தரும் என்பதை உணர்ந்து வாழ வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! எமது அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் வாழ்வின் நிறைவை பணக்குவிப்பில் தேடாமல், பகிர்விலும், மனிதத்தை மதிப்பதிலும் தேடி மனம்மாறிய மக்களாக, மகிழ்ச்சியைப் பெற்று வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா! நாங்கள் அனைவரும் மனமாற்றம் பெற்று கனிவு உள்ளம் கொண்ட உம்மோடு என்றும் இணைந்து அகமகிழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! மனித வாழ்வுக்கு செபம் முக்கியமானது என்பதை உணர்ந்து நாங்கள் அனைவரும் இறைவேண்டலிலும், இறைப்புகழ்ச்சியிலும், நன்றியறிதலிலும் நிலைத்துநின்று உமது அருளையும் அன்பையும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக்காலம் 4 ஆம் ஞாயிறு 22-12-2024
## மீக்கா 5:2-5; எபி 10:5-10; லூக் 1:39-45

### முன்னுரை

தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார தளத்தில் உற்பத்தி முறை, முன்னேற்ற முயற்சிகள் அனைத்தும் பெரிய பெரிய அளவில்